# பிஸ்கட்டுக்களில் உடல் நலத்திற்கு கேடான நிறப்பொருள்; மானிப்பாயில் பெருமளவு பிஸ்கட்டுக்கள் அழிப்பு

உள்ளூர் பேக்கரிகளில் உற்பத்தி செய்யப்படும் பிஸ்கட்டுகள் குறித்து கவனமாக இருக்குமாறு பொது மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர் இந்த பிஸ்கெட்டுகளில் சேர்க்கப்படும் நிறப் பொருட்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியவையாக உள்ளமை சுகாதார அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பேக்கறி ஒன்றில் தயாரிக்கப்பட்ட பிஸ்கட்டுகளில் உணவுப் பொருட்களுக்கு தடைசெய்யப்பட்ட நிறங்கள் அடங்கியிருந்ததை பரிசோதனை மூலம் உறுதிசெய்த சுகாதார பரிசோதனை அதிகாரிகள் அவற்றை முழுமையாக நிலத்தில் புதைத்து அழித்துள்ளனர். கடந்த மாதம் உணவு, மருந்து பரிசோதகர்கள் இப் பிரிவிலுள்ள உணவு விடுதிகள், பேக்கரிகள் ஆகியவற்றிற்கு நேரடியாகச் சென்று உணவுப்பொருட்களை

— 8-ம் பக்கம் பார்க்க

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 இதழ் 60 வியாழன் 05-04-1990 (பங்குனி 23) ரமழான் 08

# இந்தியப்படை நடாத்திய தாக்குதலுக்கு இந்திய அரசு நஷ்டஈடு வழங்கவேண்டும்

- நெடுமாறன் கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் இந்தியப்படைகள் நடாத்திய தாக்குதல்களுக்கு இந்தியா இலங்கைக்கு நஷ்ட ஈடுவழங்க வேண்டும் என காந்திகாமராஜ் கட்சித் தலைவர் ப. நெடுமாறன் கேட்டுள்ளார். இந்தியப்படைகளின் தாக்குதல்களினால் சேதமடைந்த கட்டிடங்களை புனரமைக்க இந்திய அரசு ஒரு கோடி இந்திய ரூபாய்களை இலங்கைத் தமிழருக்கு நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என நெடுமாறன் இந்திய மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த திரு நெடுமாறன் வடக்கு கிழக்கில் பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்திருந்தார். அதன்பின்னர் நாடுதிரும்பமுன்னர் அவர் விடுத்திருந்த அறிக்கையில் இங்கு இந்திய இராணுவத்தினரால் ஏற்பட்ட அனர்த்தங்கள் சேதங்கள் குறித்து தான் வேதனையும், அதிர்ச்சியும் அடைவதாகக் கூறினார்.

# போராளிகள் இராணுவம் அல்ல; அவர்கள் மக்களின் 'குழந்தைகள்

## தலைவர் பிரபா பேட்டி

'எங்கள் போராளிகளை நான் ஒரு இராணுவம் எனக்கூறமாட்டேன். அவர்களை நான் எங்கள் மக்களின் குழந்தைகள் எனவே வர்ணிப்பேன் அவர்கள் இப்போது எமது மக்களிடம் திரும்பிச் செல்கின்றனர். எமது மக்களுடன் கலந்து அவர்களுக்கு உதவுகின்றனர்' என தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு வே. பிரபாகரன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

'முதலமைச்சர் பதவி எனக்கு வழங்கப்பட்டபோது அதனை நான் நிராகரித்தேன் இப்போது கட்சிக்குப் பொறுப்பாகவிருக்கும் திரு. மாத்தயா அதனைப்பெரும்பாலும் ஏற்பார். நிரந்தர சமாதானம் நிலவுமாயின் சமூகரீதியில் பாதிக்கப்பட்டவர்களையும், வலதுகுறைந்த பிள்ளைகளையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளுவேன்' எனவும் திரு, பிரபாகரன் இப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

'எப்போதும் எம் மீது யுத்தமும், வன்முறையும் திணிக்கப்பட்ட போதிலும் இதயத்தில்



நாம் சமாதானத்தையே நாடுகிறோம். எனவே அதுதான்

—8-ம் பக்கம் பார்க்க

## புலிகளின் உதவியை நாடும் போலிஸ் படையினர்

தமிழ் சிங்கள புத்தாண்டையொட்டி சுமார் ஏழு வருடங்களுக்குப்பின் திருமலையில் நடைபெறவிருக்கும் கலாசார இசை நிகழ்ச்சிகளுக்கு பாதுகாப்பு வழங்க விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பை பொலிஸார் கோரியுள்ளனர் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கும் முகமாக இந்நிகழ்ச்சிகள் நடாத்தப்படவுள்ளன, இவ்விழாவில் 15000 வரையிலான பொதுமக்கள் கலந்துகொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

## மனநோய்க்கான மருந்து யாழ். ஆஸ்பத்திரிகளில் இல்லை

மனநோயாளருக்கு தேவைப்படும் முக்கியமருந்தான (ஸ்ரெலசீன் (Stelazine) யாழ்மாவட்டத்திலுள்ள எந்தவொருமருத்துவமனைகளிலும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

சில மாதங்களின் முன்பு

—8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்டத்தில் இவ்வருடஇறுதிக்குள் 17387 வீடுகள் புனரமைக்கப்படும்

இவ்வருட இறுதிக்குள் யாழ்ப்பாண மாவட்டத்தில் 17, 387 வீடுகள் புனர் வாழ்வு அமைச்சின் உதவியுடன் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. இப்புனரமைப்பு வேலைகளுக்கான பணம்வந்துசேர்ந்வுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அது வழங்கப்படவுள்ளது. வீடுகள் புனரமைப்புத்திட்டத்தின் கீழ், மொத்தம் 45, 383 வீடுகள் புனரமைப்பு செய்யப்படும் இப் புனரமைப்பு வேலை அடுத்த வருடத்தினுள் நிறைவுசெய்யப்படும்.

—8-ம் பக்கம் பார்க்க

## திருடப்பட்ட செப்புக் கம்பிகளை வாங்க வேண்டாமென அறிவிப்பு

திருடப்பட்ட செப்புக் கம்பிகள், துண்டுகள் என்பவற்றை இரும்பு வியாபாரிகள் எவரும் வாங்கவேண்டாம் என தொலைத்தொடர்பு திணைக்களம் கேட்டுள்ளது.

அண்மைக்காலமாக தொலைபேசி வயர்கள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்

— 8-ம் பக்கம் பார்க்க

## இயக்கதொலைபேசிகட்டணம் 4,34000 ரூபா!

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஈ. பி ஆர். எல். எவ் , ஈ. என். டி. எல். எவ் , ரெலோ, ஈரோஸ் ஆகிய இயக்கங்கள் கடந்த காலங்களில் பாவித்த தொலைபேசிக் கட்டணம் நான்கு லட்சத்து முப்பத்து நான்காயிரம் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது. பிராந்திய தொலைத்தொடர்பு அதிகாரியொருவர் இத்தகவலை தெரிவித்துள்ளார். இக்கட்டணம் அரசு தனியார் தொலைபேசிகளின்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## மட்டு-யாழ் இரவுபஸ் சேவை நிறுத்தம்

மட்டக்களப்பிற்கான இரவு பஸ்சேவை நேற்றுமுதல்இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது இச் சேவை கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது

இச் சேவையை நடாத்தும்படி பொதுமக்கள் கோரிக்கைவிடுத்ததை யடுத்தே இரவு பஸ்சேவைஆரம்பிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில்

## விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் திடீர் பரிசோதனை செய்வர்

வவுனியாவில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் தமது பணியினை முடுக்கி விட்டுள்ளனர்.

இங்கு கட்டுப்பாட்டு விலையினை பல வர்த்தகர்கள் மீறி நடந்து கொள்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வவுனியா செயலக வட்டாரங்கள் தெரி

— 8-ம் பக்கம் பார்க்க

## VACANCIES

Please send your applications on or Before 16th April for the following posts.

1. Site Supervisors.
2. Carpenters (தச்சுத் தொழிலாளர் உடன் வரவும்).

**K. A. ENGINEERS**
142, Palaly Road, Thirunelvely,
JAFFNA.

(04038)



## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிசில் டீப் ஃபிறீஸர் (SISIL DEEP FREEZER) விற்பனைக்கு உண்டு. மேல் விபரங்களுக்கு பற்றி மாஸ்ரோஸ் மெயின் வீதி, மாதகல்.

(04045)



## பனை அபிவிருத்திச் சபையின்
# மாணவர் கட்டுரைப்போட்டி

பனை அபிவிருத்திச் சபை பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கட்டுரைப் போட்டியொன்றை நடாத்தவிருக்கின்றது.

இக் கட்டுரைப் போட்டி 14 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கானதும், 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கானதுமாகிய இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படுகின்றது.

கட்டுரைத் தலைப்பு ''நமது சமூக பொருளாதார அபிவிருத்தியில் பனை வளத்தின் பங்கு'' என்பதாகும். பனை வளத்தின் சமூக பொருளாதார முக்கியத்துவத்தை வெளிக்கொணர்வதாகக் கட்டுரைகள் அமைந்திருக்க வேண்டும். அத்தோடு கட்டுரையின் மொழி நடையும் சீரான அமைப்பும் கவனத்திற் கொள்ளப்படும். கட்டுரைகள் சொந்தக் கையெழுத்தில் 8''X12'' அளவுத்தாளில் ஒரே பக்கத்தில் எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவுக்கும் 1-ம், 2ம்- 3ம்- பரிசுகளாக முறையே ரூபா 500/-, ரூபா 300/-, ரூபா. 200/- வழங்கப்படும்.

கட்டுரைகள் போட்டியாளரால் சொந்தமாக எழுதப்பட்டது என்பதைத் தலைமையாசிரியர் அல்லது பெற்றோர் உறுதிசெய்து, பெயர், பாடசாலை, வகுப்பு, வயது ஆகிய விபரங்களுடன் எதிர்வரும் 21.04.90 க்கு முன்பு செயலாளர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கட்டுரை அனுப்பும் உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் 'கட்டுரைப் போட்டி' என்று குறிப்பிடப்பட வேண்டும்.

குறிப்பு:- பனை அபிவிருத்திச் சபை ஊழியர்களும், அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ள தகுதியற்றவர்களாவர்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை,

04046



## மக்கள் வங்கி அடைவு மீளளித்தல்
## முல்லைத்தீவு மாவட்டம்
# திருத்தம்

ஏற்கனவே அறிவித்ததன்படி 6. 12. 83 வரை முல்லைத்தீவுக்கிளையில் அடைவுவைத்து அவற்றை மீளப் பெறுவதற்காக 21. 9. 89 வரை பணம் செலுத்தியவர்கள் நகைகளை பின்வரும் திகதிகளில் காலை 8. 30 மணி முதல் பி. ப 1. 00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

| வழங்கும் திகதி | கிழமை |
|---|---|
| 04 04 90 | புதன்கிழமை |
| 05 :04. 90 | வியாழக்கிழமை |
| 06 04. 90 | வெள்ளிககிழமை |

வழங்கும் நிலையம்;
பாங்குளம் பொலிஸ் நிலையம்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் வழங்கும் ஸ்தானத்திற்கு ஏற்பட்ட மாறுதலுக்கு வருந்துகிறோம்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி
வடபிராந்தியம்

04036


## பல்கலைக்கழகத்தில் ஸ்ரீவள்ளி

யாழ். பல்கலைக்கழக கலை வட்டத்தினரின் ஆதரவில் யாழ்- நாடக மன்றத்தினரின் 'ஸ்ரீ வள்ளி' இசைநாடகம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 7-ம் திகதி சனிக்கிழமை காலையும், பிற்பகலும் இருதடவைகள் மேடையேற்றப்படவுள்ளது.

இதன் மூலம் சேகரிக்கப்படும் பணம் 'பாதிப்புற்ற சிறுருக்கான நிதிக்கு' வழங்கப்படும்.

## வடமராட்சியில் தமிழ்த்தினப் போட்டி

வடமராட்சி கோட்டக் கல்விப் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் 9-ம் திகதி திங்கட்கிழமை வட இந்து மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

இப்பிரிவில் உள்ள எட்டு கொத்தணிகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களே இறுதிப் போட்டியில் பங்கு பற்ற தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (43)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# நேசம்மிகு அன்னை பூபதியின்
# நினைவுத் திங்கள் அஞ்சலி

ஆராதனைக்குரிய பெண்மையே!
எல்லோருக்கும்
சோற்றுப்பசி மட்டுமே எடுத்தபோது
உனக்கு மாத்திரம்
'சுதந்திரப் பசி' எடுத்தது!
அதனால் தான் நீ
பட்டினித்தவம் கிடந்து
பலநாளாய் வாடியிருந்தாய்!

●

போர் முரசங் கொட்டிவரப்;
போர் முனையிற் குண்டு வரத்;
தேர் சுமக்கும் வீதியிலே
தீ சுமக்கும் நீயிருந்த
அந்தத்
தீரம் மிகு உண்ணாவிரதத்தினால்;
மூர்க்கப் பகைவரின்
முதுகெலும்புகள் பெயர்ந்தன!
மூளைகள் அதிர்ந்தன!!

● ●



தள்ளாடும் வயதினிலே
தமிழ்ப்பெண்மை தலை சாயப்;
பொல்லாத கயவரெல்லாம்
பூமியிலே நடமாட;
அன்றொருநாள் எமதீழம்
ஆபத்தில் நடை போடப்;
பூபதியும் விட்டாளே;
பொன்னுயிரை வேள்வியிலே!

● ● ●

ஈராண்டின் முடிவினிலே
இனியவளே உனை நினைத்தோம்!
ஈழத்தின் விடிவினிலே
இதயத்தால் அரவணைத்தோம்!!

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்
வட்டுக்கோட்டைத் தொகுதி

04034

# இதயநாதம்

வியாழக்கிழமை 05-04-1990

## நல்வாக்கு

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் உண்மை உள்ளது. உண்மை எப்படி வழிகாட்டுகின்றதோ அப்படியே நடக்கவேண்டும்.

-காந்தியடிகள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## மருந்து விலைகுறைப்பு

அத்தியாவசிய மருந்துகளின் விலையைக் குறைப்பது தொடர்பாகப் பலதரப்பட்ட கருத்துகள் கடந்த சில வாரங்களாகப் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கடந்த காலங்களில், மருந்துகளின் மீதான சுங்கவரித் தீர்வையும், விற்பனை மீதான வரியையும் அரசாங்கம் ரத்துச் செய்தது.

இதன் அம்சமாகவே சகல பார்மஸிகளும், மருந்து விற்பனை நிலையங்களும் மருந்துகளின் விற்பனைப் பட்டியலைப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தன.

இது சம்பந்தமான கண்டிப்பான உத்தரவைச் சுகாதார அமைச்சும், வர்த்தக அமைச்சும் பிறப்பித்துச் செயற்படுத்தி வருகின்றன.

ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு இந் நடைமுறை சாத்தியமாகியுள்ளதா என்பதுவே இன்றுள்ள கேள்வியாகும்.

சிலவேளைகளில் தலைநகரமான கொழும்பிலும், மற்றைய நகரப்பகுதிகளிலும் மருந்து விலை குறைக்கப்பட்டிருக்கலாம், விலைப்பட்டியல் தொங்கவிடப்பட்டிருக்கலாம்.

மற்றைய மாகாணங்களிலும், மாவட்டங்களிலும் நூற்றுக்குப் பத்து வீதம் கூட மருந்து விலை குறைக்கப்படவில்லை. பட்டியலும் வெளிவிடப்படவில்லை.

பொதுமக்கள் நலன்கருதி இவ்விடயத்தை இங்கு சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும். ''மருந்தினது விலை அதிகரிக்கும்'' என்ற வதந்தி பரவ ஆரம்பிக்கும்போதே வியாபாரிகளிடம் இருக்கும் பழைய ஸ்ரொக் மருந்துகளின் விலையும் அதிகரித்துவிடும்.

''ஆனை விலை - குதிரை விலையாக'' அதிகரித்து விற்பனை செய்யும் உள்ளூர் பார்மஸிக்காரர்களும், டிஸ்பென்ஸரிக் காரர்களும் இது விடயத்தில் மௌனம் சாதித்து வருகின்றார்கள்.

குறைக்கப்பட்ட மருந்துகளின் விலைகள் அடங்கிய விலைப்பட்டியலைப் பொதுமக்களின் பார்வைக்காக ஏன் வைப்பதில்லை.

அல்லது வைக்கப்பட்ட விலைப்பட்டியலில் குறிக்கப்பட்ட விலையில் ஏன் மருந்துகள் விற்கப்படுவதில்லை?

ஒவ்வொரு வீட்டிலும் ஆகக் குறைந்தது ஒரு நோயாளியாவது இருக்கின்ற இந்தக் கால கட்டத்தில் மருந்து விற்பனையானது அத்தியாவசிய உணவுகளின் விற்பனையிலும் பார்க்க அதிகமாகிவிட்டது.

இந்த அதிகரிப்பைப் பயன்படுத்தியே உள்ளூர் பார்மஸிக் காரர்களும், டிஸ்பென்சரிக் காரர்களும் லாபத்தைப் பெற்று வருகின்றார்கள்.

முழத்திற்கு ஒன்றாகத் திறக்கப்பட்டிருக்கும் மருந்து விற்பனை நிலையங்களின் அதிகரிப்பு இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும்.

இந்த நிலையில், ஏழை நோயாளர்களின் வயிற்றில் அடிப்பது போன்று, மருந்துகளின் விலையைக் குறைக்காமல் நடந்து கொள்வது வேதனைக்குரியதொன்றாகும்.

நொண்டிச் சாட்டுகளைக் கூறாது உடனடியாக மருந்துகளின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# மாணவர்களின் உடல் நலக்குறைவிற்கு மதிய உணவு முக்கிய காரணமா?

**எஸ். ராஜ்மோகன்**

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் தற்போது கல்வி சம்பந்தமான விடயங்களை விட மதிய உணவு வழங்கும் விடயமே முக்கிய செயற்பாடாக உள்ளது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள பல பாடசாலைகள் கல்வித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதைவிட மதியஉணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலேயே கூடிய கவனம் செலுத்தி வருகின்றன.

ஆனால் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத்திட்டத்தின் நோக்கங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்பது மட்டும் உண்மை. பல சுயநலவாதிகளின் செயற்பாடுகளால் இத்திட்டம் பாதிப்படைந்து வருகின்றது. இன்று பாடசாலை அதிபர்கள் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக அதிகளவு நேரத்தைச் செலவுவிட்டு வருகின்றார்கள். உள்ளூர் பொருட்களை கொள்வனவு செய்து மதிய உணவைத் தயாரித்து... மாணவர்களுக்கு வழங்கி ... கணக்கு வழக்கு எழுதி...

பொதுவாக அதிபர்கள் பாடசாலை முன்னேற்றத்தையோ, நிர்வாகத்தையோ பற்றிச் சிந்திக்க நேரம் கிடைப்பதில்லை, நாளைய மதிய உணவு என்ன என்பது பற்றியே சிந்திக்கின்றார்கள். வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இத்திட்டத்தின் செயற்பாடுகளை நோக்கினால் பொதுவாக கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளிலே இத்திட்டம் பெற்றோர்களினாலும், மாணவர்களினாலும் வரவேற்கப்பட்டு முறையாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. நகர்ப்புறப் பாடசாலைகளில் இத்திட்டம் அவசியம்போல் தெரியவில்லை.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மொத்தமாக ஐந்து லட்சத்து தொண்ணூற்றி எண்பதினாயிரத்து ஐந்நூற்றி எண்பத்தாறு மாணவர்கள் தினமும் மதிய உணவு பெற்று வருகின்றார்கள். இவற்றில் மூன்று லட்சத்து இருபத்தையாயிரம் மாணவர்களே இத்திட்டத்தின் மூலம் கூடிய பயன்பெறுகின்றார்கள், ஆனால் ஒரு லட்சத்திலும் குறைவான மாணவர்களே இத்திட்டத்தின் மூலம் பூரணபயன் பெறுகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கஷ்டப் பிரதேசம் என்று முத்திரை பொறிக்கப்பட்ட பாடசாலைகளில் இத்திட்டம் மூலம் கூடியபயன் இருப்பதாகத்தெரியவருகின்றது. இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாணவர்வரவு அதிகரிப்பது இந்த மதிய உணவுத் திட்டத்திலே ஆகும். பாடசாலை நாட்களில் இப்பகுதிகளில் உள்ள பல பெற்றோர்கள் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்காமல் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நகர்ப்புறத்தில் உள்ள பாடசாலைகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் இங்கு மதிய உணவுத் திட்டம் ஒழுங்காக அமுல் படுத்தப்பட்டுள்ள போதும் அதனால் அதிகளவு பயன் கிடைப்பதில்லை. உள்ளூர் உணவுப்பொருட்களை விரும்பாத மாணவர்கள் இங்கு கூடுதலாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்தமதிய உணவுத்திட்டத்தில் பல மோசடிகளும் முறைகேடான சம்பவங்களும் தற்போது இடம்பெற்றுவருவது தற்போதைய பத்திரிகைச் செய்திகளில் இருந்து தெரியவருகின்றது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கடந்து போன காலங்களை ஓர் கணம் திரும்பிப் பார்த்தால் எத்தனையோ பாடசாலைகளில் ... சுத்தமற்ற உணவு ...... பழுதடைந்த உணவு...... கலப்பட உணவு ......போன்ற பல புகார்கள் வெளிவந்தன. இன்றுகூட இப்பிரச்சினைகள் ஓய்ந்ததாகத் தெரியவில்லை, இத்திட்டத்திற்கு பொறுப்பானவர்களின் இலாபநோக்கமா? அல்லது வேண்டுமென்ற செயலா? என்பது இதுவரை எவராலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

மிக அண்மைக் காலத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் வழங்கப்பட்ட மதிய உணவில் மண்புழு இருந்ததாகச் செய்தி வெளிவந்திருந்தது. வவுனியா மாவட்டத்தில் மட்டுமல்ல யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இப்படியான பல முறைகேடான சம்பவங்கள் இடம்பெற்றதை அண்மைக் காலங்களில் வெளிவந்த பத்திரிகை செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான பாடசாலை ஒன்றிற் கூட இவ்வாறான முறைகேட்டு நடவடிக்கை நடைபெற்றுள்ளது.

துப்பரவு செய்யப்படாமல் சமைத்தல், துப்பரவுசெய்யப்படாதபாத்திரங்களில் சமைத்தல், இலாப நோக்கத்திற்காக பழுதடைந்த உணவுப்பொருட்களை வாங்குதல் போன்றபல சீர்கேட்டு நடவடிக்கைகளினால் இன்று மாணவசமுதாயம் பல சுகாதாரச் சீர்கேடுகளை எதிர் நோக்கிவருகின்றது.

பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு மதிய உணவுதான் காரணமாக இருக்குமோ என்று பெற்றோர்கள்கூட சந்தேகப்படுகின்றார்கள். இப்படியான சம்பவங்களினால் பாதிக்கப் பட்ட பல பெற்றோர்கள் தமது குழந்தைகளை பாடசாலைமதிய உணவை உண்ணவேண்டாம் என்று கட்டாயப்படுத்தி பாடசாலைக்கு அனுப்புகின்றார்கள்.

நகர்ப்புறப்பாடசாலைகளில் மட்டுமல்லாது ஒருசில கிராமப் புறப்பாடசாலைகளிலும் மதிய உணவை உண்ணாமல் பல மாணவர்கள் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மதிய உணவுத் திட்டம் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புக் கிடைக்குமென்ற அரசின் நோக்கங்கள் உண்மையில் நிறைவேற்றப்படவில்லை. பாடசாலைகளில் கோதுமைமாவால் தயாரிக்கப்பட்ட பாண், பணிஸ், கேக், போன்ற சிற்றுண்டி வகைகள் மதிய உணவாக வழங்கப்பட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதிபர்களுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருட்களை இத்திட்டத்திற்கு பயன்படுத்தும்படி அறிவிக்கப்பட்டபோதும் இலங்கையில் உள்ள அறுபத்தைந்து சதவீதமான பாடசாலைகள் கோதுமைமாவில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களையே தற்போது வழங்கி வருகின்றன. வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளிலும் கோதுமைமாவில் தயாரிக்கப்பட்ட உணவே வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத் திட்டத்திற்கென அரசாங்கம் வருடாந்தம் இருநூறு கோடி ரூபாவை செலவிடுகின்றது. கூடுதலாக உள்ளூர் விவசாயிகள் இத்திட்டத்தால் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அது நிறைவேறவில்லை.

உள்ளூர் விவசாயிகளின் நன்மை கருதி எதிர் வரும் மேமாதம் முதல் புதிய திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளது, அதாவது மாணவர்களுக்கு மதிய உணவுக் கூப்பன் வழங்கும் திட்டமாகும். இக் கூப்பனை மாணவர்கள் தத்தமது பகுதிகளில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் சமர்ப்பித்து உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வாங்க முடியும். இத் திட்டத்தின் மூலம் உள்ளூர் விவசாயிகளின் உற்பத்தியைப் பெருக்குவதுடன் மதிய உணவு மோசடிகளைக்குறைக்க முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலை மதிய உணவுத் திட்டம் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டால் உள்ளூர் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புக் கிடைக்கும் என்ற அரசின் நோக்கம் தற்போது தவிடுபொடியாக்கப் பட்டுள்ளது.

பெரும்பாலான பாடசாலைகளில் கோதுமைமாவில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களே மதிய உணவாக வழங்கப்பட்டு வருகின்றன. இது பற்றிக் கேட்டால் இதுவும் உள்ளூர்த் தயாரிப்புத் தானே என்று கூறுகின்றார்கள்.

பாண், பணிஸ், கேக், பிஸ்கட் இவை உள்ளூர்த் தயாரிப்புகள் தான் ஆனால் இவற்றின் மூலப் பொருளான கோதுமை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் புரிவார்களா?.........அல்லது புரிந்தும் புரியாதது மாதிரி நடக்கின்றார்களா?...............

எது எவ்வாறோ எமது நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாயிகளை முன்னேற்றுவதற்கு யாவரும் முன்வரவேண்டும். மதிய உணவுத் திட்டம் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்பட்டால் நிச்சயமாக உள்ளூர் விவசாயிகள் நன்மையடைவார்கள் என்பதை சகலரும் நினைவிற்கொள்ளவேண்டும்.

## எம்.பி. கோரிக்கை

# நெடுந்தீவுக்கு நிரந்தர மின் விநியோகம் தேவை

நெடுந்தீவுப் பகுதிக்கு மின் விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கையெடுக்குமாறு யாழ். மாவட்ட எம்.பி. திரு. கே. நவரட்ணம் மின்துறை அமைச்சரைக் கேட்டுள்ளார்.

தற்போது நெடுந்தீவில் ஒரு சிறிய மின் இயந்திரத்தின் மூலம் வைத்தியசாலைக்கும் தபால் நிலையத்திற்கும் மின், சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

1989ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மின்சார சபையின் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி வேலைத் திட்டத்தில் சேர்த்து, நெடுந்தீவுக்கு நிரந்தர மின் விநியோகம்கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் எம்.பி. அமைச்சரைக் கேட்டுள்ளார்.

# யோக சுவாமிகள் குருபூசை இன்று

யோக சுவாமிகளின் வருடாந்த குரு பூசை, இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் கீரிமலை-யோக சுவாமிகள் மகளிர் தவ நிலையத்தில், வ. செல்லையா தலைமையில் நடைபெறும். இன்றைய தினம் பூஜைகளும், ஆராதனைகளும் இடம்பெறும்.

# வன்னிச் செய்திகள்

## பயிற்சிக் கருத்தரங்கு

''திறமை மிகுந்த முகாமைத்துவ நெறியானது, ஒரு ஸ்தாபனத் தலைவருக்கு இன்றியமையாததொன்றாகும். ஏனெனில் உயர்தரமான பயன்களை உரியவழிமுறைகளிற் பெற்றுக் கொள்வது இதன் மூலம் சாத்தியமாகின்றது. இந்த வகையிற் பாடசாலைத் தலைவர்களும் உன்னதமான முகாமைத்துவ ஆற்றலுடன் செயற்படவேண்டியது மிக மிக அவசியமானது. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டக் கல்வித் திணைக்களம் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து நடத்திய ''முகாமைத்துவக் கருத்தரங்கின்'' இறுதி நாள் வைபவத்திற் கலந்து கொண்ட முல்லைத்தீவுப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். எஸ். மனோகரன் தெரிவித்தார்.

புனிதத்திற்கும், போற்றுதலுக்குமுரிய ஆசிரியப் பணியைத், திட்டமிட்டு முன்னேற்றப் படிகளில வழிநடத்திச் செல்பவர்கள் அதிபர்களே. மிகக் குறைந்தளவு வசதி வாய்ப்புகளைக் கொண்டுள்ள எமது பாடசாலைகளை நிறைவோடு நடத்தி, வெற்றிப் பயனைப்பெறுவதற்கு உந்து சக்தியாகத் திகழ்பவர்களாகிய அதிபர்களின் பணி மனித சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது.'' என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுக் கூறினார்.

## நீர் விநியோகம் திருப்தியில்லை

வவுனியா வடக்குப் பகுதிக்கான நீர் விநியோகம் திருப்தியாக நடைபெறுவதில்லை எனப் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது. குழாய்கள் பல இடங்களில் வெடிப்புக் கண்டுள்ளதாகவும் இதனாற் பாவனையாளர்களுக்குப் போதியளவு நீர் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி நீர்விநியோக வடிகாலமைப்புப் பகுதிக்கு கடிதமூலம் தெரிவிக்கப்பட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## தெரிவு குறித்து அதிருப்தி

முல்லைத்தீவு மாவட்டத்திலும் பயிலுநர் ஆசிரியர்கள் தெரிவில ஊழல்கள் இருப்பதாக புகாரிடப்படுகிறது. ஆசிரியர் தெரிவின் போது பட்டியலில் காணப்பட்ட ல பெயர்கள் நியமனத்தின் போது மாயமாக மறைந்து விட்டதாம். ஆசிரியர்கள் நியமனங்கள் ஆசிரியர்கள் குறைந்த கிராமப்புற பாடசாலைகளிக் கவனம் செலுத்தாது கூடுதல் ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளில் நியமனத்தை வழங்கியுள்ளதால் ஆரம்பக் கல்வியைப் பெறும் கிராமப்புற வசதி குறைந்த பிள்ளைகளின் கல்வி பாழடிக்கப்படுவதோடு, பிள்ளைகளின் எதிர்காலமும் வீணடிக்கப்படுவதாகப் பெற்றோர்கள் அஞ்சுகிறார்கள். (38)

## பஸ் சேவை படுமோசம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை முல்லைத்தீவுச் சாலையின் சீரற்ற பஸ் சேவையால் இப்பகுதி சிறார்களின் கல்வி பாதிக்கப்படுகிறது இப்பகுதிகளில் போதிய பஸ்கள் இல்லாததினாலும் சீரற்ற பஸ் சேவை நடைபெறுவதினாலும் கிராமப்புற ஏழைச் சிறுவர்களின் கல்வியில் மண் விழுகிறது. மாணவ மாணவிகள் உரிய நேரத்தில் பாடசாலைக்குச் செல்லவும், பாடசாலையை விட்டு வீடுவருதற்கும் பஸ் சேவை சீரற்று இருப்பதால் விரக்தியடையும் பிள்ளைகள் கல்வியை இடைநிறுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு -துணுக்காய் பஸ் சேவை உரிய நேரத்தில் செயற்படத்தவறுவதால் முல்லைத்தீவிலிருந்து மாங்குளம் தபாலகத்திற்கு வரும் தபாற் பொதிகள் மறு நாள் காலையிலேயே மாங்குளம் தபாலகத்தைச் சேர்கிறது. இந்நிலை தொடர்வதனால் முல்லைத்தீவிலிருந்து வரும் தபால்கள் கால தாமதத்தின் பின் உரிய இடங்களுக்குச் செல்கிறது இந்த பஸ் சேவை இரவு வேளையில் துணுக்காய்க்குப் போய்ச் சேருவதனால் தென்னியங்குளம், கோடடைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் பகுதி மக்கள் தூர இடங்களுக்குச் செல்வதில் ஏற்படும் தடையினால் மறுநாளே தமது இடங்களுக்குச் செல்ல நேரிடுகிறது. கொழும்புக்குச் செல்லும் காலைப் புகையிரதத்திற்கு இணைப்புச் சேவை இல்லாததால் முல்லைத்தீவுப் பகுதி மக்கள் புகையிரதத்தில் பயணம் மேற்கொள்ள முடியாது அவலமுறுகின்றனர் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின் மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு பஸ் சேவை இல்லாததனால் பல இடங்களிலிருந்தும் வரும் பிரயாணிகள் மாங்குளத்தில் அவல நிலையில் இரவுப் பொழுதை தொடர்ந்து சழிக்கின்றனர். இந்நிலை மாறவேண்டுமென சம்பந்தப்படடவர்கள் புகாரிடுகின்றனர். (38)

## குழாய்க்கிணறு அமைக்கப்படும்

வவுனியா மாவட்டத்தில் தற்போது 350 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன இதற்கு 63 இலட்சம் ரூபா செலவாகியுள்ளது என இத்திட்டத்தின் முகாமையாளர் எஸ். சிவகுமார் தெரிவித்துள்ளார். மேலும் 50 குழாய்க்கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கு 36 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கிராமியப் பாடசாலைகளில் 57 குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கும், 53 பாடசாலைகளில் மலசல கூடங்களை அமைப்பதற்கும் நாம் 70 இலட்சம் ரூபா வினைச்செலவு செய்ய திட்டமிட்டுள்ளோம். கிராமிய வைத்திய சாலைகளின் குடிநீர் விநியோகம் தொடர்பான திட்டத்திற்கு 18 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (11)

## பாவனையாளர் பாதுகாப்பு சங்கம்

மாங்குளம் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டது. சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: மு. இராசலிங்கம், செயலாளர்:- கு பஞ்சலிங்கம் பொருளாளர்:-செ சத்தியமூர்த்தி மற்றும் 7பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

### விடுதலையான ரேஹண சொன்னார்

# ராஜீவைத் தாக்கியபோது என் உயிர் என் கையில்

''திரு. ராஜீவ் காந்தியை தாக்கியபோது எனக்கு ஏற்பட்டிருந்த உணர்வுகளை விளக்கிக் கூறக் கூடிய மன நிலையில் நான் இப்போது இல்லை. ஆனால் அந்த வேளையில் அந்த முடிவைச் செய்த போது என் உயிர் என் கையிலேயே இருந்தது.'' இவ்வாறு நேற்று முன் தினம் வெலிக்கடைச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட இலங்கை கடற்படை வீரர் விஜயமுனிகே ரேஹண டி. சில்வா சொன்னார்.

பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்க விரும்பாத அவர் 'இன்று என்னை விடுதலை செய்யாதிருந்தால் இன்னும் நான்கு மாதங்களின் பின்னரே நான் விடுதலையாகியிருக்கவேண்டும். ஆனால் இன்னும் ஐந்து வருடங்களும் உள்ளே இருக்க தயாராக இருக்கிறேன்' என்று கூறினார்.

'சிறைவாசம் எனக்கு ஓர் அனுபவம், ஒரு நண்பர் கூட என்னைவந்து பார்க்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவரை புறக்கோட்டையிலுள்ள காலி பஸ்நிலையத்தில் கொண்டு சென்று அதிகாரிகள் சிறைச்சாலை வாகனத்தில் விட்டனர்.

24 வயது உடைய கடற்படை ரேடியோ தொழில் நுட்பவியலாளரான அவர் சிறையிலிருந்து வெளியே வந்தபோதுசிரித்தபடிவந்தார். நீலநிற ட்ரௌஸரும் வெள்ளை சேர்ட்டும் அணிந்தபடி தனது பொருட்களை ஒரு பையில் எடுத்துக்கொண்டு வந்தார்.

ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாஸ 700 பேருக்குச் சிறைத் தண்டனையைக் குறைத்திருந்தார். அவர்களுள் இவரும் ஒருவர். திடீரென அறிவிக்கப்பட்டதால். பூஸாவிலுள்ள இவரது பெற்றோருக்குத் தகவல் கிடைக்கவில்லை.

திரு. காந்தியை இலங்கை-இந்திய உடன்படிக்கை கைச்சாத்தான பின் நடைபெற்ற அணிவகுப்பின்போது தாக்கியதற்காக 6 வருட சிறைத்தண்டனை பெற்றிருந்தார் ரேஹண.

வருடாந்த ரீதியில் அவரது தண்டனைக்காலம் குறைக்கப்பட்டு வந்தது.

## இந்தப் பிரதம மந்திரி ஓர்'ராசியில்லா ராஜா'

பாரதப் பிரதமர் திரு விஸ்வநாத் பிரதாப்சிங் ரேஸ் கோப் வீதியிலுள்ள உத்தியோக ரீதியான இல்லத்திற்கு இன்னும் இடம் மாறவில்லை,கடந்த பெப்ரவரி மாதமே முன்னால் பிரதமர் திரு ராஜீவ்காந்தி இந்த இல்லத்தைக் காலி செய்து விட்டார், அதையடுத்து திரு. சிங்கிற்காக இவ்வில்லம் பெரிய அளவில் புனரமைப்புச் செய்யப்பட்டது ஆனால் பிரதமர் எப்போது புதிய இல்லத்தில் குடியேறுவார் என்பதுதிட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆகப் பிரவேசத்துக்கான சுபவேளை குறித்து பண்டிதர்கள் இன்னமும் தீர்மானிக்காததே இதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களே தாமதத்திற்குக் காரணமென உத்தியோகபூர்வ வட்டாரங்கள் கூறுகின்றன.

## சமய பாடசாலைத் திறப்பு விழா

அண்மையில் வட்டக்கச்சியில் கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன்முதலாவதுசைவப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது.

இவ் வைபவத்தில் கிளிநொச்சி செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபரும், கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவருமான திரு. க. துரைராசா தலைமை தாங்கினார். பளையைச் சேர்ந்த சிவ அன்பர் திரு. க, குமாரசாமிப் புலவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கிளிநொச்சி கச்சேரி கணக்காளரும், கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் மன்றத் தலைவருமான திரு. கா. வீரசிங்கம் சிறப்புரை ஆற்றினார்,. மேலும் சமூக சேவை உத்தியோகத்தர் திரு. பொன். நித்தியானந்தன் உரையாற்றினார். 30 சைவச் சிறார்கள் இப் பாடசாலையில் கல்வி கற்க சேர்க்கப்பட்டதுடன், குருகுலத்தில் சைவப் போதகர் பயிற்சி பெற்ற செல்வி தில்லையம்பலம் சமய ஆசிரியராக நியமிக்கப்பட்டார்,

### தலைவர் பிரபாவுக்கு வீரசைவர் ஆசி

## கானகத்திலிருந்தும் தமிழர் மானம் காத்த வீரன்

வீரசைவ குருமஹா சன்னிதானம் விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு ஆசிச்செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளது.

தமிழ் மக்களின் உயர்வுக்கும்,சுதந்திரத்திற்கும் சிறிதேனும் தயங்காது சேவை புரியும் தலைவர் அவர்களும், அவரைச் சார்ந்த போராளிகளும் இரண்டாண்டு காலம் கானகத்தில் தமிழனின் மானம் காக்கத் தர்மப்போர் புரிந்து வெற்றி வாகையுடன் மக்கள் மத்தியில் தோன்றியிருக்கும் இவ்வேளையில் வீரசைவர்கள் சார்பில் எமது ஆசியையும், பாராட்டுதல்களையும் மனமாரத் தெரிவித்துக்கொண்டு தமிழீழ மக்கள் தொல்லைகள் நீங்கி வாழவேண்டுமெனவும், மேன்மேலும் புலிகளுடன் இரண்டறக்கலக்க வேண்டுமெனவும் இட்டலிங்கப் பெருமானைப் பிரார்த்திப்பதாக இவ் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில்வே ஊழியர் தற்கொலை

ரயில் கடவை பாதுகாப்பு ஊழியர் ஒருவர் அலரிக்காய் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார். கந்தர்மடம் பழம் வீதியை வசிப்பிடமாக கொண்ட நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையான ஜேசுராசா (வயது 35) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துக் கொண்டவராவார். (41

## 7, 8-ம் திகதிகளில் இவர்களுக்கு நிவாரணம்

கொக்குவில் மேற்கு கிராம சேவையாளர்பிரிவைச் சேர்ந்த 1209 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபா ஏழாம் திகதி சனிக்கிழமை ஸ்ரான்லிவீதி இலங்கை வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

எட்டாம் திகதி ஞாயிற்றுக் கிழமை உற்பத்தி முயற்சிக்கான நன்கொடைப் பணம்ரூபா நான்காயிரம் பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ளது.

சுந்தர்மடம் (18) திருநெல்வேலிகிழக்கு(69) கோண்டாவில்மேற்கு(19)கோண்டாவில் கிழக்கு (388) கொக்குவில் மேற்கு(8) கொக்குவில் மத்தி(33) வண்ணார்பண்ணை வடமேற்கு(295) வண்ணார் பண்ணை வடகிழக்கு(16).

## வட்டு இந்துக்கல்லூரி அதிபருக்கு பிரியாவிடை வைபவம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை அவர்கள் இளைப்பாறியதை முன்னிட்டு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மாபெரும் பிரியாவிடை வைபவத்தை வெகுவிரைவில் நடாத்தவுள்ளனர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் திரு.சி டாஸ் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்திற்கான சகல நடவடிக்கைகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சைவப் புலவர் திரு நா.க.,தங்கரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

## பருத்தித்துறையில் கம்பியூட்டர்பயிற்சி

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமம் ஆங்கிலப்பயிற்சி வகுப்புக்களையும், கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்களையும் ஆரம்பிக்கவுள்ளது. (20)

## படுகொலை தொடர்பாக சப்இன்ஸ்பெக்டர் கைது

கடந்த மாதம் பம்பலப்பிட்டி நீதி மன்றத்தில் வைத்து கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்ட அனுராகாமல் குருசிங்க கொலை சம்பவம் தொடர்பாக அம்பாந்தோட்டை பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பொலிஸ்காரர் ஒருவரின் பெற்றோரை கொலை செய்த சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவந்த ஒருவரை கொக்காவில பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

இலங்கை இராணுவம் புனரமைப்பு

# பயிரை மேய்ந்த வேலிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

இலங்கை இராணுவம் புனரமைக்கப்பட இருப்பதாகவும், கடந்த காலங்களின் குற்றச் செயல்கள், முறைகேடுகளில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் களையெடுப்பு செய்யப்படவுள்ளதாகவும், பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முறைகேடாக நடந்த இராணுவத்தினர்மீது நடவடிக்கை எடுக்குமாறும் இதன் மூலமே மக்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெற முடியுமெனவும் இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இதற்கான உத்தரவை விடுத்தார்.

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள தகவல்களின்படி அதிகமான இராணுவவீரர்கள் பல்வேறு குற்றச்செயல்கள் காரணமாக தற்போது பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் இராணுவ அதிகாரிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெண்கள்மீது பலாத்காரம் புரிந்தது திருட்டு, கொலை, என்பன இவர்கள் புரிந்த குற்றச் செயல்கள் ஆகும்.

# எல்லா மொழிகளும் கட்டாயதிணிப்பு! எங்கள் தமிழோ, ஏங்கித் தவிப்பு!

தமிழ் நாட்டிலே முன்பு சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் நிகழ்ச்சிகள் முழுவதிலும் 'ஹிந்தி'த் திணிப்பே கட்டாயமாக இருந்து வந்தது. ஏனெனில், அன்றைய மத்திய ஆட்சி வட - இந்தியர் ஆதிக்கம் நிறைந்த ஒன்றாக இருந்ததால் அந்த நிலைமை, ஆனால் இன்று தேசிய முன்னணி அங்கம் வகிக்கும் மத்திய ஆட்சியில், சென்னைத் தொலைக்காட்சியில் 'தெலுங்கு'த் திணிப்பே கட்டாய மாக்கப்பட்டுள்ளது இது பற்றி ஏகப்பட்ட கண்டனக் கடிதங்கள் சென்னைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநருக்கும், தமிழக முதல்வர் கலைஞருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன, தமிழக ஆளுங் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசான தேசிய முன்னணிக் கூட்டமைப்பில் மிக முக்கிய அங்கம் வகிப்பதால், இந்தக் கட்டாயத் தெலுங்குத் திணிப்பையிட்டுப் பகிரங்க எதிர்ப்பை வெளியிட முடியாமல், உள்ளூரக் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது இன்றங்கே கட்டாயத் தெலுங்குத் திணிப்பு! அருமைத் தமிழோ, நடுத்தெருவிற் தவிப்பு! (ஜெ)

வவுனியா அலுவலகத்தின்

# கூரை எந்நேரமும பறக்கலாம்; ஊழியர்கள் பெரும் அச்சம்

வவுனியா நகரில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் அலுவலகக் கூரை எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளதாக காணப்படுகின்றது.

இதனையிட்டு அங்கு கடமையில் ஈடுபடும் அலுவலக ஊழியர்கள் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி அலுவலகத்தின் முன் கூரையின் ஒரு பகுதிக்கு தற்காலிக முண்டு கொடுத்து கூரை கீழே விழாதபடி பாதுகாக்கபபட்டுள்ளதும் இங்கு காண முடிந்தது.

மிகவும் பழமை வாய்ந்த இக் கட்டிடத்தினை புனரமைக்க எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை என்று சம்பந்தப்பட்ட அலுவலக பணியாளர் ஒருவர் கூறினார். (11)

வேலணைக் கோட்டத்தில்

# பயிலுநர் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புகள்

இம் மாதம் 10, 11, 12 ஆகிய திகதிகளில் பயிலுநர், ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புக்கள் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலய மண்டபத்திற் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

புதிதாக நியமனம் பெற்றுள்ள அனைத்து ஆசிரியர்களும் தவறாது சமூகமளிக்க வேண்டுமெனவும், இவ்வகுப்புக்களுக்கு வருகின்றவர்கள் சாப்பாட்டு ஒழுங்குகளுடன் சமுகந்தர வேண்டுமெனவும், வேலணை கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி, புலேந்திரன் தெரிவித்துள்ளார். (20)

பயங்கர வாத நடவடிக் கையால்

# கடமைக்கு செல்லாதோருக்கு சம்பளம், விடுமுறை வேண்டும்

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாககடமைக்கு சமூகமளிக்க முடியாமல் போன அரச ஊழியருக்கு விசேட விடுமுறையும் சம்பளமும் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்று பாராளுமன்றததில் கொண்டுவரப்படவுள்ளது.

பயங்கரவாதச் செயல்களினால் பாதிக்கப்பட்ட அரசாங்க, கூட்டுத் தாபன உள்ளூராட்சி சபை ஊழியர்களுக்கும் இவ் விசேட விடுமுறையும் சம்பளமும் வழங்கப் படவேண்டுமென்று அப்பிரேரணையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கட்டடத் திறப்புவிழா

ஒன்பது இலட்ச ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகக் கட்டடத்தின் திறப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமையன்று நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சிவசம்பு தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைச் சம்பிரதாய முறைப்படி திறந்து வைப்பார்.

# அன்னை நினைவாக வவுனியாவில் உண்ணாவிரதம்

அன்னைபூபதியின் 2ம் ஆண்டு நினைவு தொடர்பாக வவுனியா பஸ் நிலையம் அருகில் நடைபெறும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் கடந்த சனிக்கிழமை வவுனியா வர்த்தக சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் குறிப்பிடத் தக்கது

இம் மாதம் 19ம் திகதிவரை இந்த உண்ணாவிரதம் சுழற்சி முறையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

19ம் திகதி வியாழக்கிழமை வவுனியாவில் அன்னை பூபதியின் மாபெரும் எழுச்சிக் கூட்டமும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (11)

# ஆசிரிய இடமாற்றச்சபையே இடமாற்றங்களை தீர்மானிக்கும்

ஆசிரிய இடமாற்றங்களைத் தீர்மானம் செய்ய இடமாற்ற சபையொன்று அமைக்கப்படவுள்ளது.

இச்சபையில் கல்விப்பணிப் பணிப்பாளர், கல்வி அதிகாரி, ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், ஆகியோர் அங்கம் வகிப்பர். இந்த இடமாற்றச் சபையே எதிர்காலத்தில் ஆசிரிய இடமாற்றத்தைக்கூடித் தீர்மானம் செய்யும். (4)

# செய்தி மஞ்சரி

## தொண்டாவுக்குப் பாராட்டு

''உல்லாசப் பிரயாணிகளை மேலும் கவரும்பொருட்டு இலங்கையை வெளிநாடுகளில் சரியான முறையில் எடுத்துக் காட்டக் கூடியவர் திரு. தொண்டமான் என்பதாலேயே அவருக்கு உல்லாசப் பயணத்துறை அமைச்சு வழங்கப்பட்டது'' என்று ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாஸ பண்டநாயகா சர்வதேச மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இலங்கைக் கைப்பணிப் பொருட்கள் கண்காட்சியில் பேசுகையில் கூறினார்.

## 'உரிமை மறுப்பின் சிறுமையே'

'' சிறுபான்மை மக்களின் உரிமைகளை மறுத்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது'' என்று பெருந்தோட்டத் துறை அமைச்சரும் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்தின புளத்சிங்கள பகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துப் பேசுகையில் கூறினார்.

''சிறுபான்மை மக்களின் உரிமைகளை மறுத்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதை கடந்தகால சம்பவங்களிலிருந்து தெரிந்து கொண்டேன் நமது இளைஞர்களை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி போராடியதனால் அபிவிருத்திக்குச் செலவிடவேண்டிய பணத்தை பாதுகாப்புக்குச் செலவிடவேண்டியதாயிற்று என்றார்.

## பாடசாலைப் புனரமைப்பு

வடக்கு, கிழக்கிலுள்ள 511 பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாக வட, கிழக்கு மாகாண கல்வியமைச்சின் பதில் செயலாளர் திரு. சற்குணராஜா தெரிவித்தார்.

இதற்காக 24 கோடி ரூபா நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி, கனடிய அரசு ஆகியவை வழங்கியுள்ளன என்றும் அவர் கூறினார்.

## கிராமிய தொழில் அபிவிருத்தி

வடக்குக், கிழக்கு மாகாணத்தில் கிராமிய தொழிற் துறையை அபிவிருத்தி செய்வதன்மூலம் மக்களின்வாழ்வில் புது வேகத்தை ஏற்படுத்த முடியும் என்று வட, கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி கிராமியத்துறை அமைச்சின் பதில் செயலாளரான திரு. எஸ். பற்குணம் கூறியுள்ளார். மாகாண சபை ஊழியர்களின் ஒத்துழைப்பையும் அதிகாரிகளின் ஒருங்கிணைப்பான சேவையுமே இன்றைய அவசியத் தேவை என்றும் அவர் சொன்னார்.

## சமாதான யாத்திரை

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கமும் பளை மகாவித்தியாலய சாரணர் குழுவும் இணைந்து பளையிலிருந்து கொழும்புக்கு சைக்கிளில் சமாதான யாத்திரை ஒன்றினை மேற்கொள்ளவுள்ளன. இக்குழுவின் தலைவர் திரு. எம். புவனேந்திரன் புதுவருட தினத்தன்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு பிரதி பிரதம சாரணர் ஆளுநர் திரு. லயனல் சில்வா மூலம் சமாதான செய்தி ஒன்றினைக் கையளிப்பார்.

## சாவிலும் இணைந்தனர்

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்ய முயன்ற மனைவியைக் காப்பாற்றச் சென்ற கணவனும் ரயிலால் மோதுண்டு மரணமான துயரச் சம்பவம் பாணந்துறையில் நிகழ்ந்துள்ளது. மனைவி ஸ்தலத்திலும் கணவன் ஆஸ்பத்திரியிலும் உயிர் துறந்தனர்.

## துயில்வேளை மீளாய்துயில்

உறக்கத்தில் ஆழ்ந்திருந்த ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். பிரட்றிக் கோட்டைக்குள் இச்சம்பவம் நிகழ்ந்தது கச்சேரி வாசலில் காவலாளியாகக் கடமைபுரிந்த டபிள்யு. ஏ. வசந்த (26) என்பவர் கடமை முடிந்து தனது அறையில் உறங்கிக்கொண்டிருந்தபொது சந்தேகநபர் பாண் வெட்டும் கத்தியால் அவரைக் குத்தினர் என்றும் தனிப்பட்ட விரோதமே இதற்குக் காரணமென்றும் சந்தேக நபரான கச்சேரி ஊழியர் பின்னர் பலரால் தாக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## தூண்டுதலே விழாக்கள்

தமிழ் மொழியை இன்பத்தேன்மொழி என்று அழைப்பது கண்டு அம்மொழியை நம் மாணவர்கள் சிறப்பாகக் கற்பதற்கு ஓர் தூண்டுகோலாகவே தமிழ்த்திறன் பாட்டிகளும், தமிழ் விழாக்களும் நடைபெறுகின்றன என்று மாவனல்ல கோட்டக் கல்வி பணியகக் கல்வியதிகாரி ஜனாப் ஜை. எல். எம். வஹாப் கூறினார்

## பல்கலைக்கழக வசதி

ஜி. சி. ஈ சாதாரணதரப் பரீட்சையில் தராதரம் பெற்ற மாணவர்கள் யாவருக்கும் பல்கலைக்கழக வசதி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் பாரிசீலித்து வருகின்றது இலங்கையின் புதிய பல்கலைக்கழகம் என்ற பெயருடன் செனட் தேசிய மாகாண இன்ஸ்ரிரியூட்கள் கல்லூரிகளுடன் இணைந்து இயங்க வசதியளிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது ஜனாதிபதி இதன் வேந்தராக இருப்பார்.

எம்பிலிப்பிட்டியாவில்

## தேசிய விளையாட்டு விழா; வடகிழக்கு வீரர்களும் பங்குபற்றுவர்

இம்முறை தேசிய விளையாட்டு விழா எம்பிலிப்பிட்டியாவில் மகாவலி விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

அக்டோபர் 31, செப்டம்பர் 01, 02-ம் திகதிகளில் விழாக்கள் நடைபெறும் என உத்தியோகபூர்வ வட்டாரங்கள் கூறின.

பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்க விளையாட்டு விழாவை ஆரம்பித்துவைப்பார். இறுதிநாள் வைபவத்தில் ஜனதிபதி திரு ஆர். பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார் என அறிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு உட்பட 25 மாவட்டங்களிலிருந்தும் விளையாட்டு வீரர்கள் இதில் கலந்து கொள்வார்கள் என வடக்கு கிழக்கு மாகாணவிளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளர் திரு ஏ, எஸ். குணரட்ணம் தெரிவித்தார்.

உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே கிரிக்கெட், கூடைப்பந்தாட்டம் ஆகியவற்றின் ஆரம்ப ஆட்டங்கள் ஏற்கனவே நடைபெறும்.

இறுதிப்போட்டிகள்மட்டுமே எம்பிலிப்பிட்டியாவில் நடைபெறும் எனறும் தெரிவிக்கப்பட்டது.

## கள்ளத் தராசு பாவனைகள் யாழ்நகரில் அதிகரிப்பு

யாழ் குடாநாட்டில் உள்ள பல வியாபார நிலையங்களில் இருவகையான தராசுப்படிகள் பாவனையில் உள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இருவகையான தராசுப் படிகளில் ஒருவகைக்கு மட்டுமே சீல்வைக்கப்பட்டுளதாகவும் கூடுதலாக சீல்வைக்கப்படாத தராசுப்படிகளே பாவனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (03)

புதுவருடத்தை முன்னிட்டு

## பாதை அனுமதியின்றி பஸ்சேவை நடாத்தலாம்

தமிழ்-சிங்களப் புத்தாண்டுக்காகத் தூர இடங்களுக்குச் செல்லும் மக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு தனியார் பஸ் சொந்தக்காரர்கள் நாட்டின் எப்பகுதிக்கும் பாதைஅனுமதிப்பத்திரமின்றி பஸ் சேவையை நடத்துவதற்கான அனுமதியைப் போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் வழங்கியுள்ளார்.

வழக்கமாக அறவிடும் கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிடப்படக்கூடாது என்றும், அவ்வாறு அறவிடும் பஸ் சொந்தக்காரர்களின் பாதை அனுமதிப்பத்திரம் ரத்துச்செய்யப்பட்டு அவர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

## புங்குடுதீவு வர்த்தகர் சங்கம்

புங்குடு தீவு வர்த்தகசங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் புங்குடுதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தீவகப் பொறுப்பாளர் வீ. கஸ்ரோ கலந்து கொண்டு உரையாற்றுகையில் வர்த்தகர்கள் சேவை மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டுமென்றும், தமது சுயநலம் பாராது மக்களது தேவைகளை உணர்ந்து செயற்படவேண்டுமென்றும். நெருக்கடியான காலக்கட்டத்தில் பொருட்களைப் பதுக்கி வைத்தல் கூடாதென்றும். விடுதலைப் போராட்டத்தில் வர்த்தகர்களும் பங்களிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். (24)

## சுவையான செய்திகள்

### கோடுநிறைய வழக்கு வரும்

இங்கிலாந்தில் வசிக்குள் ஒரு தாய்- பிரதமர் தட்சர் மீது ஒரு வழக்குப் போட்டார். இந்த வழக்கை அங்கேயுள்ள நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது. அது என்ன வழக்குத் தெரியுமா? தன்னுடைய மகன் தொடர்ந்து வேலையில்லாமற் திண்டாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போதுதான் படும் வேதனையைத் தாங்க முடியவில்லையென்றும் ஒவ்வொருநாளும் அவன் வேலைதேடி அலைந்து வீடு திரும்புக்காட்சி தன் இதயத்தைக் கசக்கிப் பிழிகின்றது என்றும் இந்த மனச் சித்திரவதைக்குப் பிரதமர் தான் காரணம் எனவும் குற்றம் சாட்டியுள்ளார். நம் நாட்டில் ஒரு பேச்சுக்கு இம்மாதிரி வழக்குப் போட்டால் எப்படி இருக்கும்? நிறைய கோர்ட்டுகள் கட்டவேண்டி வரும் என்கிறீர்களா? ரொம்பச் சரெக்ட்!

### உயிரற்றதற்கு உயிர் கொடுக்க

இங்கிலாந்து நாட்டில் முன்பு விசித்திரச் சட்டம் ஒன்று அமுலில் இருந்து வந்தது. இறந்து போனவரின் உடலை உல்லன் போர்வையால் போர்த்திய பிறகுதான் அதைப் புதைக்க வேண்டும் என்பதே அந்தச் சட்டம் நசிந்து கொண்டிருந்த உல்லன் தயாரிப்புத் தொழிலுக்கு உயிர் கொடுப்பதறகாக இந்தச் சட்டம் வந்தது. 1814-ம் ஆண்டுக்குப் பின் இச் சட்டம் நீக்கப்பட்டது.

மட்டக்களப்பில்

## வைக்கோல் கொள்வனவு மீண்டும் ஆரம்பம்

தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் வாழைச்சேனை ஆலையினரால் பெரும் போக வேளாண்மை அறுவடையின் பின்பு வைக்கோல் கொள்வனவு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமைதியான சூழ்நிலை காரணமாக இவ்வருடம் 7,000 மெற்றிக் தொன் வைக்கோலை பெரும் போக வேளாண்மை அறுவடையாக கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 4000 மெற்றிக் தொன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் உள்ள கொள்வனவு நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் இருந்து வைக்கோல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

## துறையூர் உற்சவம்

வேலணையில் பிரசித்தி பெற்ற துறையூர் அரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 30ம் திகதி ஆரம்பமாகியது. இம்மாதம் எட்டாந்திகதி ஞாயிற்றுக்கிழமை அலங்காரமூர்த்தி உற்சவமும் நடைபெறும். தினமும் விஷேட அபிடேக ஆராதனைகள் நடைபெற்று ஐயனார் வீதி உலாவரும் காட்சியும் இடம் பெறுகின்றது. (24)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### பேய்க்கு நூல் கட்டியவர்தான் அதை அவிழ்க்கவேண்டுமா?

ஆசிரியர்
முரசொலி

பயிலுநர் ஆசிரியர் தெரிவின் போது எனது பெயர் இரு பட்டியலகளிலும் (பத்திரிகைகளிலும்) இடம் பெற்றிருந்தும். கடைசி நிமிடத்தில் ஏதேதோ காரணங்கள் கூறப்பட்டு எனது நியமனம் ரத்துச்செய்யப்பட்டது.

மூலச் சான்றிதழ்கள் மீளாய்வு செய்யப்பட்ட போதுகூட எதுவுமே கூறுமல் கடைசி நிமிடத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் செய்யக்கூடிய மனிதாபிமானமுள்ள செயல்தானு இது?

புதிய கல்விப்பணிப்பாளர் அவர்களாவது இதற்கான காரணங்களை ஆராய்ந்து, ஆசிரியர் தெரிவின் பின்னணியில் நடைபெற்ற ஊழல்களைக் கண்டுபிடித்து எம் போன்றவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு உதவ முன்வருவாரா? அல்லது பேய்க்கு நூல் கட்டியவர் தானே அவிழ்க்க வேண்டும் எனக்கூறி தட்டிக் கழிப்பாரோ?

தற்பொழுது நீதிக்குப் பொறுப்பானவர்கள் இதனைக் கவனத்திற் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேம்.

பருத்தித்துறை S. இரஞ்சிதமலர்

### 250 ரூபாவை கட்டுவதற்கு 250 மைல் செல்வதா?

ஆசிரியர்
முரசொலி.

புதிதாக மோட்டார் சைக்கிள்களை வாங்குவோர் யாழ். செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்துப் பிரிவிலேயே அவற்றை பதிவு செய்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. இங்கு மோட்டார் சைக்கிள்களை பதிவதற்கு சென்ருல் பத்திரங்களை பரிசீலித்து ஏற்றுக் கொள்கிருர்கள். ஆனுல் அதற்குரிய அனுமதிக் கட்டணத்தை கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு நேரில் சென்று கட்டும்படி பணிக்கிருர்கள். இதனுல் 250 ரூபா பணத்தைக் கட்டுவதற்காக 250 மைல் தூரம் வீணுக அலைய வேண்டியுள்ளது. வேண்டிய மாற்று நடவடிக்கையை எடுப்பதன்மூலம் மோட்டார் சைக்கிள் பதிவை முழுமையாக இங்கேயே மேற்கொள்ள வசதிகள் செய்யப்படுமா?

பாஷையூர் கிளிபேர்ட் அந்தனிப்பிள்ளை

உள்ளூரில் போலி உற்பத்திகள்;

## பைக்கட் சிற்றுண்டிகள் நோயையும் காவிவரும்

இன்று வடபகுதிகளில் பிரபல்யமாகியுள்ள பைக்கட்டுகளில் அடைக்கப்படும் சில உணவு வகைகளினுல் பல நோய்கள் ஏற்பட்டுவருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்போது வீடுகள் தோறும் ஐஸ்பக்கெட்டுகள் தயாரிக்கப்படுகிறது. அத்துடன் பலர் பலகார உணவுகளை தயாரித்து பைக்கெட்டுகளில் அடைக்கின்றுர்கள். எவ்வித அனுமதியும் பெறுமல் மனம்போன போக்கில் செயற்படுவதனுல் எமது சமுதாயம் பல நோய்களை எதிர்நோக்கி வருவதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய உற்பத்திகளை இனங்கண்டு, அவற்றை வாங்காது விடுவதன் மூலம் நோய் நொடிகளைத் தவிர்த்துக்கொள்ளலாம் எனவும் சுகாதார அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

யாழ். பிரதம தபாலக அதிபர் எச்சரிக்கை

## மதுபோதையில் வரும் தபாலக ஊழியர்மீது கடும் நடவடிக்கை

மதுபோதையில் தபால் விநியோகம் செய்பவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ் பிரதம தபாலக அதிபர் திரு.எஸ். பரராசசிங்கம் முரசொலிக்குத் தெரிவித்தார்.

முரசொலிக்குக் கிடைத்த பல புகார்களையடுத்து அவருடன் தொடர்பு கொண்டபோதே மேற்படி அவர் தெரிவித்தர்,

மதுபோதையில் தபால் விநியோகம் செய்வது சட்டப்படி குற்றமான செயலாகும். அப்படி மதுபோதையில் தபால் விநியோகம் மேற்கொண்டது கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக வேலையிலிருந்து இடைநிறுத்தப்படுவார் என்று அவர் மேலும் தெரிவித்தார், (03)

## 'நிதர்சனம்' தொலைக்காட்சி கலைஞர்கள் கலந்துரையாடல்

யாழ் பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள புலிகளின் தொலைக்காட்சி சேவையான 'நிதர்சனம்' தலைமை அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் இக் கலந்துரையாடலில் கலைஞர்கள், ஆதரவாளர், அபிமானிகளைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஹொரணையில் கைதானர்

ஜே வி.பி யின் ஹொரணை பகுதித் தலைவரொருவர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரணை சிறு என்றழைக்கப்படும் எம் சிறிபாலா என்னும் இந்த நபர் கொலை, கொள்ளை போன்ற பல நாசகார வேலைகளில் சம்பந்தப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது. கைதாகும் போது பல நவீன ஆயுதங்களும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

## களனி பல்கலைக்கழகத்தில் உள்ளூர் கைக்குண்டுகள்

களனி பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஊழியர்களால் இரண்டு உள்ளூர் கிரனேட் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் குண்டு செயலிழக்குமபடையினர் இவற்றை செயலிழக்கச் செய்தனர்.

## ரமழான் சிந்தனைகள்

### அனாதைகளை ஆதரியுங்கள்

எந்த முஸ்லிம் வீட்டில் அனாதை மிக அன்புடன் நடத்தப்படுகிறதோ அந்த முஸ்லிமின் வீடுதான் சிறந்த வீடாகும்,, என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார். ''தன்னுடையவும்' பிறருடையவும் அனாதைகளை ஆதரிக்கும் ஒருவன், சுவர்க்கத்தில் என்னோடு இவ்வாறு இருப்பான்''- என்று அண்ணல் (ஸல்) அவர்கள் தமது சுட்டு விரலையும், நடு விரலையும், பிரித்து, சிறிது இடைவெளி விட்டு, சாடைக்குறிப்பால் உணர்த்தினார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;- நான்கு வகையான மனிதர்கள் இருக்கின்றனர் அவர்களை அல்லாஹ் சுவர்க்கத்தில் நுழையச் செய்யமாட்டான்; அவர்கள் சுவர்க்க அருட்கொடைகளைச் சுவைக்கவும் பாக்கியம் பெறமாட்டார்கள், அவர்களின் ஒருவன்- மது அருந்துபவன். மற்றுருவன் வட்டி உட்கொள்பவன் மூன்று மவன்-அனாதைகளின் பொருட்களை அநீதியாகப் புசிப்பவன்-நான்காமவன்-தாய் தந்தையருக்கு மாறு புரிபவன்.

## இன்று நாள் எப்படி?

மேடம்: வாக்கு, வசீகரம் வணிகர்கள் கடல்தொழில், செய்வோர் இலாபம், தொழிலாளர் அகமகிழ்ச்சி.

இடபம்: பெண்களால் பகை. பெரியோராசி, உயர்பதவி, உத்தமர்களுறவு, வாக்குப்பலிதம் வணிகர்கள் இலாபம்.

மிதுனம்: தேடியவர் வருகை, சுகஜீவியம், பணவருவாய், விவாகநிச்சயம், உயர்பதவி.

கடகம்: பணவரவு, சகோதர வழியுதவி, வாகன இலாபம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்.

சிங்கம்: பிதாவழிச் சுகம், பெரியோராசி, வாகன இலாபம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்.

கன்னி: உடல் ஒட்டிய ரோகம், உத்தமருறவு, பெரியோர், வருகை, புதுத்தொழில்.

துலாம்: உயர்பதவி, உத்தமருதவி வாகனசுகம், பெரியோர் வருகை.

விருச்சிகம்: உயர்பதவி, உடல் ஒட்டிய ரோகம், வாகனசுகம், வணிகர்கள், இலாபம்.

தனுசு: சுகஜீவியம், வாகன சுகம், ரோகநிவர்த்தி வணிகர்கள் இலாபம்.

மகரம்: புகழ்தேடிவரும், சுகஜீவியம், வாக்குப்பலிதம், வணிகர்கள் கடல்தொழில் மூலம் இலாபம்.

கும்பம்: உயர்பதவி, கல்வியால் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், புதுத் தொழில்.

மீனம்: புகழ்தேடிவரும், வாகனசுகம், பணியலங்காரம், உயர்பதவி. வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்.

யாழ் சோதிடர்
அ. அரியநாயகம்

## தீவுப் பகுதிகளில் சீரற்ற தபால் சேவை

ஊர்காவற்றுறை அஞ்சல் அலுவலகத்திற்கு அனுபப்படும் தாபற்பொதிகள் தரம்பிரிக்கப்பட்டு அதிகாலை 6 மணிக்கு யாழ் நகரின் பிரதான பஸ் நிலையத்திற்குக் கையளிக்கப்பட்டாலும் அனேகமாக மு.ப 10 மணிக்குப் பின்னரே அப்பொதிகள் ஊர்காவற்றுறை அஞ்சல் அலுவலகத்தை வந்து சேருகின்றன. இ.போ.சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகளே இவற்றை ஏற்றிக்கொண்டு வந்து கையளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் தபால் சேவைக்கென பிரத்தியேக பஸ் இல்லாத நிலையால் இவற்றைக் கிரமமாக விநியோகிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக அறியப்படுகின்றது இவ் அவல நிலையை நிவர்த்தி செய்யுமாறு ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ் தபால் அத்தியட்சகரை ஒருமகஜர்மூலம்கோரியுள்ளது.

## வடமராட்சி கிழக்கு உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் கழகங்களுக்கு இடையேயான உதைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இப் போட்டியில் இபகுதியில உள்ள 20 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் இப் போட்டிகள் யாவும்வடமராட்சி கிழக்கு டுவிதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. (43)

ஈராக் ஜனாதிபதி வெகுண்டெழுகிறார்

# தீ மூலம் இஸ்ரேலை நாம் நிர்மூலமாக்க முடியும்!

''எமக்கு அணுகுண்டு தேவையில்லை. எம்மிடம் இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன. அணுகுண்டு மூலம் எம்மைப் பயமுறுத்த முயற்சிப்பவர்களுக்கு இரசாயன ஆயுதங்களால் பதிலடி கொடுப்போம். இஸ்ரேல் எம்மைத் தாக்கினால் இரசாயனக் குண்டுகளைப் பயன்படுத்தி இஸ்ரேலைத் தகர்ப்போம்'' என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்குக்கு எதிராக இஸ்ரேல் செயற்படத் தலைப்பட்டால் இஸ்ரேலின் அரைவாசிப் பகுதியினைத் தீயினால் அழித்துவிடுவோம் என்றும் அவர் கூறினார்.

பாக்தாத் வானொலி மூலம் அவர் இதுபற்றித் தொடர்ந்து தெரிவித்ததாவது:- ''1987-ம் வருடம் முதல் இரசானக் குண்டுகளை நாம் தயாரித்து வருகிறோம். 1981-ல் இஸ்ரேல் யுத்த விமானங்கள் ஈராக்குக்குச் சொந்தமான பாக்தாத் ஒசிராக் பகுதி அணு உலை மீது தாக்குதல் நடத்தின. இத் தாக்குதலில் அணு உலைக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது அணு ஆயுதக் கருவிகளை ஈராக் ஒற்றர் பிரிவு கொள்வனவு செய்ய முயன்றதாகப் பிரிட்டன் அமெரிக்கா சாட்டிய குற்றச் சாட்டுகளை ஈராக் மறுத்துள்ளது. எம்மிடம் போதியளவு இரசாயன ஆயுதங்கள் உள்ளன அவை எமது பாதுகாப்புக்குப் போதுமானவை என ஈராக் தெரிவித்துள்ளது.

விமர்சகர் சுப்புடு விளாசுகிறார்:-

# பாடுவதற்குக் குரல்வளம் தேவை! ஆடுவதற்கு அபிநயம் தேவை!

(சென்னை)

''இன்றைய தினம் அனேக இளஞ்சிட்டுக்கள் அற்புதமாய்ப் பாடுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஏற்ற வசதி வாய்ப்புக்கள் எங்கே தரப்படுகின்றன? வேறு வழியில்லாமல் அவர்களும் மெல்லிசைக்குப் போய்விடுகின்றார்கள்.''

''நமது இசை விற்பன்னர்கள் அவர்களது குரல்வளத்தைப்பற்றி யோசிப்பதே இல்லை. அதற்கு மாறாக, வடக்கத்தி வித்துவான்கள் குரலை மட்டுமே வைத்துக்கொண்டு சக்கைப் போடு போடுகிறார்கள். நம் கச்சேரிகளிற் பாவம் என்பது எள்ளளவும் இல்லை.''

மேற்கண்டவாறு பேசினார், பிரபல இசை-நாட்டிய விமர்சகர் சுப்புடு அவர்கள். சென்னையிலே அவருக்கு நடந்த சிறப்புப் பாராட்டு விழா ஒன்றிற் பதிலுரையாற்றிய அவர் தொடர்ந்து பேசுகையில்:-

''நாட்டிய உலகைப் பார்த்தால், எனக்கு ரொம்பவும் மனவருத்தமாய் இருக்கிறது. அதே வர்ணம், அதே நாயக நாயகி பாவம் மாரன் கணை பாய்ந்து ஓயும் வழியாய் இல்லை பாய்ந்து, பாய்ந்து உடம்பே ஓட்டையாகி விடும் போலிருக்கிறது. நமது இதிகாசப் புராணங்களில் வேறு கருத்துக்களே கிடையாதா? இருக்கிற நட்டுவனார்கள் வழங்கியதையே வழங்கி, வழங்கி வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் நாட்டிய நடனக்கலையின் இலக்கணத்தைப் போதிப்பதே இல்லை. இது மகா தவறு. ஒவ்வொரு நாட்டிய மணிக்கும் நட்டுவாங்கம் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். கூடவே இசைப் பயிற்சியும் வேண்டும். அப்போதுதான் பாவம் புரியும், அபிநயம் புரியும். இல்லாவிடில், ''ஆட்டத்தைப் பார்க்காமல், ஆளை, ஆளைப்பார்க்கிறார்!'' என்று ஆகிவிடும். எனத் தனக்கே உரிய ஹாஸ்யத்துடனும், காரத்துடனும் குறிப்பிட்டார். (ஜெ)

# அந்நியர் நம் மண்ணில் ஒரு நிமிடம்கூட இருத்தலாகாது; அதிரடி நடக்கும்

## அமெரிக்கருக்கு எதிராக இக்குரல் எழுவது பிலிப்பைன்ஸில்

பிலிப்பைன்ஸில் உள்ள அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படுமென கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மணிலாவுக்கு பயங்கரவாதத்தடுப்பு நடவடிக்கைகளுக்கென உதவி அனுப்புவதை ஜப்பான் நிறுத்திக்கொள்ளவேண்டுமென்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய மக்கள் இராணுவம் என அழைக்கப்படும் கிளர்ச்சிப் பிரிவினரே இவ்வெச்சரிக்கைகளை விடுத்துள்ளனர்.

அமெரிக்கர்கள் ஒரு நிமிடம் கூட எமது நாட்டில் இருக்கத் தேவையில்லை. அவர்களது ஏகாதிபத்தியத்தை எடுத்துக்காட்டும் விதத்திலேயே இங்கு தங்கியிருக்கின்றனர். பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கர் தாக்கப்படுவர் அவர்களின் இலக்குகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸில் இரு அமெரிக்கத் தளங்கள் இயங்குகின்றன. பிரதான தளங்களான இந்த இரண்டிலும் சுமார் 12,000 அமெரிக்கப் படை வீரர்கள் உள்ளனர்.

ஒரே சமயத்தில் இரண்டு கடமைகள்:-

# நேர்முகப்பரீட்சையா? பரீட்சைமேற்பார்வையா? ஆசிரியர் திண்டாட்டத்தை அகற்றுவது யார்?

இலங்கைக் கல்விச் சேவைகள் ஆணைக்குழு அதிபர் தரம் 1 தரம் 2 என்பவற்றிற்கான பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்குரிய நேர்முகப் பரீட்சைக்கு இம்மாதம் 6-ம் 7-ம் திகதிகளில் ஏற்பாடுகள் செய்துள்ளது முன்பு நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோரே இந்நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர். இந்நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவுள்ள ஆசிரியர்களிற் பெரும்பாலானோர் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப்பரீட்சையின் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றி வருகின்றார்கள் இதனால் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதில் இவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். பரீட்சைத்திணைக்களம் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப்பரீட்சையை நடாத்தும் அதே நாட்களில் கல்விச் சேவை ஆணைக்குழு மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு ஆசிரியர்களை அழைத்திருப்பது அவர்களுக்கு ஒரு சிக்கலான நிலையைத் தோற்றுவித்துள்ளது

# வெளிக்களக் கல்வி நிலையம் புனரமைப்புச் செய்யப்படும்

இந்தியப்படையின் வெளியேற்றத்தையடுத்து பழுதடைந்துள்ள தொண்டமானாறு வெளிக்களக்கல்வி நிலையத்தை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானக், ஆய்வு கருத்தரங்குகளை நடாத்துவதற்கு எதுவாகவும் ஆசியர்கள் தங்குவதற்கு வசதியாகவும் இவ் விடுதி திருத்தியமைக்கப்படும் என அவர் தெரிவித்ததோடு வடக்குக், கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் இதற்கான உறுதியை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# மட்டுநகர் கிராமங்களுக்கு புதிய தொலைபேசி இணைப்புகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அசம்பாவிதங்கள் காரணமாகத் துண்டிக்கப்பட்ட கிராமங்களுக்கான தொலைபேசி இணைப்புகள் மீண்டும் வழங்கப்பட்டு வருகின்றன

புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழே தொலைபேசி துண்டிக்கப்பட்ட கிராமங்களுக்கும், உபதபால் நிலையங்களுக்கும் இணைப்பு வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதுவரை 10 உப- தபால் நிலையங்களுக்கும், 15 தொலைபேசிப் பாவனையாளர்களுக்கும் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தொலைத் தொடர்புத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி பிரேமா

# வட - கிழக்கின் பிரச்சினை மிகச்சிக்கல் வாய்ந்தவை

"வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பிரச்சினைகள் மிகவும் சிக்கல் வாய்ந்தவையாகும். சம்பந்தப் பட்டவர்கள் யாவருக்கும் திருப்தியளிக்கக்கூடிய வகையில் அப்பிரச்சினைகள் தீர்த்து வைக்கப் படவேண்டும் அப்பிரச்சினைகள் விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையுடன் தீர்க்கப்பட வேண்டும்"

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ நேற்று பாராளுமன்ற இரண்டாவது கூட்டத் தொடரின் அங்குரார்ப்பணவைபவத்தில் அரச கொள்கை விளக்கவுரையில் குறிப்பிட்டார்.

"வடக்கு கிழக்குப் பகுதிகளில் தற்போது நிலைமைகள் சீரடைந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தற்போது ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்குத் திரும்பியுள்ளனர்." என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நீதி, நியாயம், சமத்துவம் ஆகியன சிறந்து விளங்கும் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு நாமனைவரும் பாடுபடவேண்டும். நாட்டின் பொருளாதார சமூக, வாழ்க்கைத் துறையுள் யாவையும் வழமையான நிலைக்குத்திரும்பிவருகின்றன."

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் வட,கிழக்கு எம்.பிக்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி



மக்கள் ஐக்கிய சோஷலிஸ முன்னணி ஆகியவற்றின் எம். பிக்கள் கலந்து கொள்ளவில்லை.

வட-கிழக்கு அஞ்சல் ஊழியர்க்கு

## ஊக்குவிப்புப் பணம் முழுவதும் வழங்குமாறு கோரிக்கை

வடக்கு, கிழக்கு தபால் ஊழியர்களுக்கு கஷ்டப்பிரதேச ஊக்குவிப்புப் பணம் இம்மாதச் சம்பளத்துடன் கொடுக்கப்படவுள்ளது. 1989 யூலை மாதத்துக்குரிய பணம் மட்டுமே இம்மாத சம்பளத்துடன் வழங்கப்படும்.

1989 யூலை மாதம் தொடக்கம் வழங்கப்படவேண்டிய நிலுவைப் பணம் வழங்கப் படாமல் ஒரு மாதத்தொகை மட்டுமே வழங்கப்படுவதை ஆட்சேபித்து வட-கிழக்கு அஞ்சல் தொடர்பு சேவையாளர் சங்கம் கொழும்பிலுள்ள தாய்ச்சங்கத்திற்கு அறிவித்துள்ளது. தாய்ச் சங்கம் நடவடிக்கை எடுக்காவிடில் எதிர்வரும் மே மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள கூட்டத்தில் வடக்கு-கிழக்கு களில்சங்கத்தின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

### இயக்க...

பாவனையால் ஏற்பட்டதாகும் ஈ பி ஆர் எல் எவ் எழு தொலைபேசி இணைப்பு 204000 ரூபா, ஈ என் டி எல் எவ் இரண்டு தொலைபேசி இணைப்பு 66000 ரூபா ரெலோ ஒன்பது தொலைபேசி இணைப்பு 124000 ரூபா ஈரோஸ் ஆறு தொலைபேசி இணைப்பு 38000 ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது.

### யாழ் மாவட்டத்தில்...

இவ்வீடுகள் புனரமைப்பு திட்டத்திற்கு அரசு சார்பற்ற நிறுவனங்கள் உதவுவதன்மூலம் புனரமைப்பு வேலைகள் துரிதப்படுத்தப்படுமென எதிர்பாக்கப்பட்டுள்ளது.

இவ் வீடுபுனரமைப்பு பணம் கட்டம்கட்டமாகவே அறவிடப்படும். ஊக்குவிப்புப் பணமாக முதலில் 1000 ரூபாவும், அத்திவாரத்திற்கு 2000 ரூபாவும் கூரைக்கு 6000 ரூபாவும் பூச்சுக்கு 2000ரூபாவும் வழங்கப்படும்.

## யாழ்.இளைஞர் பிரான்சில் பலி

அகதியாக வெளிநாடு சென்ற சுழிபுரம் மேற்கைசேர்ந்த விஷ்வநாதன் சசிக்குமார் என்ற 17 வயதுடைய இளைஞர் ஒருவர் பிரான்ஸ் நாட்டில் நிகழ்ந்த கார் விபத்து ஒன்றில் சிக்கிமரணமானார். இவ்வருடம் இங்கிருந்து ஜேர்மனிக்கு சென்ற இந்த இளைஞர் ஜேர்மனியில் இருந்து பிரான்சுக்கு செல்லும் வழியில் இடம்பெற்ற மோட்டார்கார் விபத்தில் சிக்கிஉயிர் இழந்ததாக இது பற்றி அறியப்படுகின்றது. (13)

### பிஸ்கட்டுகளில்...

பரிசோதனைசெய்தனர். பிரஸ்தாப பேக்கரியிற்கும் அதிகாரிகள் நேரில் சென்று பரிசோதனை செய்தனர். அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பிஸ்கட்டுகளை பார்வையிட்ட குழுவினர் அவற்றின் நிறங்களில் சந்தேகம் கொண்டு அவற்றில் சிலவற்றை தம்முடன்எடுத்துச் சென்று கொழும்பு அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் அலுவலகத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். அங்கிருந்து பரிசோதனை அறிக்கை கிடைத்ததில் அந்த பிஸ்கட்டுகளில் மக்களின் உடல் நலத்திற்கு பெரும் கேடு விளைவிக்கும் இரசாயன நிறங்கள் அடங்கியிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. மேற்படி பேக்கறிக்கு விரைந்த உணவு, மருந்து பரிசோதகர்கள் அங்கிருந்த மேற்படி நிறங்களைக் கொண்ட பிஸ்கட்டுகளை உடனடியாக கைப்பற்றி அவற்றினை அழித்தொழிக்க ஏற்பாடு செய்தனர். பேக்கறி உரிமையாளரும் இனிமேல் மக்கள் உடல் நலத்திற்கு பெரும் தீங்கு விளைவிக்கும் இரசாயன நிறங்களை பயன்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டார். (13)

## அன்பளிப்பாக வழங்கப்பட்ட அளவில்லா காலணிகள்!

முன்னாள் பிலிப்பைன்ஸ் சர்வாதிகாரி காலஞ்சென்ற மார்க்கோஸின் மனைவி இமெல்டாவின் அரண்மனை அறையில் இருந்து மூவாயிரம் சோடி சப்பாத்துகள் மீட்கப்பட்டுள்ளன, இவை அனைத்தும் பிலிப்பைன்ஸில் உள்ள சப்பாத்து தயாரிப்பு நிறுவனங்கள் இமெல்டாவிற்கு என 'அன்பளிப்பாக' வழங்கியவை. எனினும் இச்சப்பாத்துகளை தாம் அணிய விரும்பவில்லை, எளிமையாகவே வாழவிரும்புகிறேன் என இமெல்டா கூறியுள்ளார். இந்தச் சப்பாத்துகள் அவருக்கு அளவில்லாததே அவர் இந்த சப்பாத்துகளை அணியாததற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

## லஞ்சம் வாங்கினால் தண்டனை கிடைக்கும்

அரச ஊழியர்களும் பொதுத் துறையில் ஈடுபடுபவர்களும் ஊழல் லஞ்சம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கடுமையாக தண்டிப்பதற்கான சட்டநகல் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இச் சட்டத்தின் மூலம் இவ்வாறு சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் அரசிடம் இருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகள் அடைக்கப்பட்டுவிடும் எனவும் இது தொடர்பான புதிய நீதிமன்றமும் அமைக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### போராளிகள்...

எனது மனதின் மனோவியலாகும். மக்களை நாம் நேசிப்பதால் சாவதற்கும் தயாராகவுள்ளோம். ஒரு அரசியல்வாதியாக வருவதைவிட சமூகசேவைகள் செய்வதையே நான் விரும்புகின்றேன்' என இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### திருடப்பட்ட...

துள்ளன, கிலோ 45 ரூபாவாக இரும்பு வியாபாரிகளுக்கு விற்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

தொலைபேசி வயர்கள் துண்டிக்கப்படுவதை தடுக்க பொதுமக்களும் வியாபாரிகளும் தம்முடன் ஒத்துழைக்குமாறும் தொலைத் தொடர்பு திணைக்களம் கேட்டுள்ளது.

இதே வேளை இவ்வாறு இனிமேலும் வயர்கள் களவாக துண்டிக்கப்பட்டால் தம்மால் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாமல் இருக்கும் என தொலை தொடர்பு திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். நகரில் அண்மைக் காலததில் ஆறு தடவைகள் அடுத்தடுத்து தொலைபேசி திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### விலைக்கட்டுப்பாட்டு...

வித்தன.

எந்தவேளையிலும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தமது வேலையினை வவுனியா நகரில் ஆரம்பிக்கலாம் என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறின.

குறிப்பிட்ட சிலர் விலைக் கட்டுப்பாட்டு விலையினை மீறி நடந்துகொள்கின்றார்கள் என கச்சேரி உயர் அதிகாரிஒருவர் சூசகமாக கூறினார்(11)

### மனநோய்க்கான...

இந்தியப் பொருட்களுக்கு ஜே. வி. பியினரால் தடைவிதிக்கப் பட்டிருந்த இந்திய மருந்தான இதுயாழ்ஆஸ்பத்திரிகளில் இல்லாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தகாலநிகழ்வுகளால்பாதிக்கப்பட்டு மனநோயாளராகியுள்ள மக்களின் தொகை யாழ் மாவட்டத்தில்அதிகம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது (3)


## காலமானர்

### வேலுப்பிள்ளை - கதிர்காமு

புலோலி மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கதிர்காமு (இளைப்பாறிய கிளாக்கரும், கண்டாவளையில் கமம் செய்பவரும்) காலமானார் அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும் வரதராஜா (O. T. S ) மங்களேஸ்வரி (டென்மார்க்), கனகராஜா (கிராம சேவையாளர் குமரபுரம்), புவனேசுவரி (கனடா), மகேசுவரி. சிறிஸ்கந்தராஜா கனடா), வைகுந்தராஜா (டென்மார்க்), பேரின்பராஜா (சுவிற்சர்லாந்து), மனோரஞ்சிதம், மங்கயற்கரசி ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவக்கொழுந்து (டென்மார்க்), திருநாதன் (கனடா) மகேந்திரகுமாரி ஆகியோரின் மாமனாரும் இலட்சுமிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 5-4-90 வியாழக்கிழமை பி. ப. 4 மணிக்கு பருத்தித்துறை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:- சி. கணபதிப்பிள்ளை
புலோலி தெற்கு,
புலோலி.

04048



## திறப்பு விழா

இன்று (5-4-90 வியாழன்) பிற்பகல் 5-40 — 6-15 வரையிலுள்ள சுபவேளையில்

# மேகாஸ் வீடியோ

திறந்துவைக்கப்படும்

வீடியோ படப்பிடிப்பாளரும்
வீடியோப் பிரதிகள் வாடகைக்கு கொடுப்பவரும்

154, கண்டி வீதி,
(மாம்பழம் சந்தி)
அரியாலை - யாழ்ப்பாணம்

04044



# BECON

ஸ்ரீதர் முன்பாக
யாழ்ப்பாணம்

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | திரு. சிவ தணிகாசலம் | ஆங்கிலம்; | திரு. S. சிவதாஸ் |
| கணிதம் | திரு L. சதீஸ் | சமூகவியல்: | திரு. M. இக்னேசியஸ் |
| விஞ்ஞானம் | திரு. N ரவி | வர்த்தகம்: | திரு புவன்ராஜ் |

O/L (DEC) DAY CLASSES

ஆரம்பம்: 9-4-90 8-00 மணி - 2-00 மணி

மு கு :-
- அனுமதிகள் வரையறையானது
- ஒவ்வொரு தவணையும் இலவசப் பயிற்சி பரீட்சைகள் நடைபெறும்

* கணிதபாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் நடைபெறும்.

040 31


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ம் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 05-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற